வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 36 /2020

வழக்கு சாட்சி LW1/ PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திவாகரன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | மோகன் | தொழில் | |
| கிராமம் | மடிப்பாக்கம் | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 31 |

தேதி 15.07.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மடிப்பாக்கத்தில் வசித்து வருகிறேன். 08.03.2019 விநாயகபுரத்தில் நான் குடியிருந்து வந்த போது எனது அப்பா இறந்த்தால் சொந்தவூருக்கு சென்று திரும்பிய போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு வீட்டில் டீவி, சில ஆவணங்கள் காணவில்லை. காணாமல் போன பொருட்கள் ஏதும் கிடைக்கவில்லை. நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எத்தனை ஆண்டுகள் கழித்து எதிரி கண்டுபிடித்துவிட்டதாக போலீசார் கூறினார் என்றால் 4 ஆண்டுகள். எதிரியை நான் பார்த்தேனா என்றால் இல்லை. திருடிய நபரை போலீசார் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கினை பதிந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. உண்மையான குற்றவாளி என்றால் ஆவணங்களை கைப்பற்றியிருக்க முடியும் என்றால் ஆமாம். போலீசார் தற்போது தான் எதிரி அஜித்குமார் என்று

கூறினார்கள் என்றால் ஆமாம். எதிரி யார் என்று தெரியாது என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.